**செ. கு. எண்: 147** **நாள்: 07.12.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின்

இரங்கல் செய்தி – 7.12.2016

---

துக்ளக் பத்திரிக்கை நிறுவன ஆசிரியரும், புகழ்பெற்ற அரசியல் விமர்சகருமான திரு. சோ ராமசாமி அவர்கள் உடல்நலக் குறைவினால் இன்று (7.12.2016) காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

பத்திரிக்கை ஆசிரியர், திரைப்பட கதையாசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், வழக்கறிஞர் என்ற பன்முக திறன் கொண்ட திரு. சோ ராமசாமி அவர்கள், திரைப்பட கதையாசிரியராகவும், திரைப்பட இயக்குநராகவும், 200–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த பெருமைக்குரியவர். திரு. சோ ராமசாமி அவர்கள் அரசியல் சார்ந்த நகைச்சுவை பாத்திரங்களில் நடித்து திரைப்படத் துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவர். திரு. சோ ராமசாமி அவர்களின் அரசியல் நையாண்டித்தனம் கொண்ட "முகமது பின் துக்ளக்" நாடகம் மற்றும் திரைப்படம் இதற்கு சிறந்த சான்றாகும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தவர் திரு. சோ ராமசாமி அவர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 60–வது பிறந்த தினத்தின் போது திரு. சோ ராமசாமி அவர்களின் வீட்டிற்கே சென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசி பெற்றார்கள். மேலும் 2011–ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது திரு. சோ ராமசாமி அவர்களின் இல்லம் சென்று அவரது நல்வாழ்த்துகளை பெற்றார்கள்.

திரு. சோ ராமசாமி அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக மக்கள் பணியாற்றியுள்ளார். திரு. சோ ராமசாமி அவர்கள் தனது பத்திரிக்கை பணிக்காக வீரகேசரி விருது, கோயங்கா விருது போன்ற பல விருதுகளை பெற்றுள்ளார்.

திரு. சோ ராமசாமி அவர்களின் மறைவு பத்திரிக்கை துறைக்கு மட்டுமின்றி திரைப்படம் மற்றும் நாடகத் துறைக்கும் பேரிழப்பாகும்.

திரு. சோ ராமசாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**